1994 ஏப்ரல் 26]

399--

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணிப் பொறிகளைப் பயன்படுத்துதல்

22522**-- **திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கணிப்பொறிகள் செயல்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கணிப்பொறிகள் செயல்பாட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எந்தெந்த வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இந்த கணிப்பொறி வசதி நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் கணிப்பொறி நிறுவி உள்ள இடங்கள், (1) சென்னை அடையார் (2) சென்னை அண்ணா நகர் (3) கோயம்புத்தூர் (4) திருச்சிராபள்ளி.

கணிப்பொறி நிறுவுவதற்கு அரசு ஆணை வழங்கப்பட்டுள்ள இடங்கள், மதுரை, வேலூர், சென்னை தொழில் நுட்பம், மதுரை தொழில் நுட்பம், சென்னை தொழில் மற்றும் வேலைவாய்ப்பு, நெல்லை, கடலூர், தஞ்சாவூர்.

கணிப்பொறி நிறுவிட பரிசீலனையில் உள்ள இடங்கள் காஞ்சிபுரம், தர்மபுரி.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே இவ்வசதி செய்து தரப்படுமா? குறிப்பாக திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு முன் உரிமை வழங்கி இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இந்த வசதி உருவாக்கித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 4 இடங்களில் கணிப்பொறிகள் செயல்படுத்தபட்டு வருகின்றன. மேலும் 8 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணிப்பொறி நிறுவ அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. இந்த நிதி ஆண்டில் காஞ்சிபுரம் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் கணிப்பொறி நிறுவுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 400, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

400--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

***23566--திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் கல்வி மாவட்டத்திலே அரசினர் தொழில் பயிற்சி நிலையம் எதுவும் இல்லை. இதனால் இப்பகுதியில் படிக்கின்ற மாணவர்கள் தொழில் கல்வியில் பயிற்சி பெறுவதற்காக சுமார் 120 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருச்சிக்குச் சென்று படிக்கவேண்டியதாக இருக்கிறது. கரூர் கல்வி மாவட்டத்தில் விவசாயிகளும், நெசவாளர்களும் அதிகமாக இருப்பதன் காரணமாக இங்கே விசைத் தறிக் கூடங்கள் மற்றும் பல்வேறு தொழில் கூடங்கள் இருக்கின்றன. எனவே இந்த பகுதியில் படிக்கின்ற, அதாவது ஐ.டி.ஐ. படிக்கின்ற மாணவர்களுக்கு இங்கே வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றதன் காரணமாக இந்தப் பகுதி மக்கள், அதாவது மாணவர்களின் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் ஐ.டி.ஐ.